# முதல் திருப்புதல் பொதுத் தேர்வு-2020

Reg.No.

## பன்னிரெண்டாம் வகுப்பு

## வணிகவியல்

நேரம்: 3.00 மணி | மதிப்பெண்கள்: 90

### பகுதி - I

20 x 1 = 20

I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக:

1. வேலையை பல்வேறு சிறு பணிகளாக பிரிப்பதை _______ என்பர்.
   a) ஒழுங்கு b) பயன்பாடு c) வேலைப்பகிர்வு d) சமத்துவம்
2. _______ உதவியால் அதிகாரப் பகிர்வு எளிதாகச் செய்யப்படுகிறது.
   a) முதுகலை வணிக மேலாண்மை b) விதிவிலக்கு மேலாண்மை
   c) குறியிலக்கு மேலாண்மை d) முதுகலை வணிக நிர்வாகம்
3. மூலதனச் சந்தையின் பங்கேற்பாளர் _______ ஆவர்.
   a) தனி நபர் b) நிறுமங்கள் c) நிதி நிறுவனங்கள் d) மேலே உள்ள அனைத்தும்
4. சரியான இணையைக் கண்டறி:
   a) கரடி - தெஜிவாலா
   b) காளை - மண்டிவாலா
   c) முடவாத்து - தாராவணிவாலா
   d) கலைமான் - முனைம வேட்டையாளர்
5. மனிதவள மேலாண்மை _______ உறவினை நிர்ணயிக்கிறது.
   a) அக, பிற b) முதலாளி, தொழிலாளி
   c) உரிமையாளர், வேலைக்காரன் d) முதல்வர், முகவர்
6. விளம்பரம் ஒரு _______ ஆட்சேர்ப்பு வளமாகும்.
   a) அகவளம் b) புறவள c) புற திறனீட்டல் d) எதுவுமில்லை
7. முதலில் வேலை, அடுத்து மனிதர் என்பது ஒரு _______ கோட்பாடு.
   a) சோதனை b) நேர்காணல் c) பயிற்சி d) பணியமர்த்தல்
8. சந்தையின் உயர்நிலையில் இருப்பவர் யார்?
   a) வாடிக்கையாளர் b) விற்பனையாளர்
   c) மொத்த விற்பனையாளர் d) சில்லறை விற்பனையாளர்
9. கீழ்க்காணும் குழுவில் எந்த குழு பசுமை வணிக கருத்தை அறிமுகம் செய்தது?
   a) ACME b) டாட்டா c) ரிலையன்ஸ் d) ICI
10. COPRA என்பதன் விரிவாக்கம் யாது?
    a) Consumer Precious Act b) Consumer Primary Act
    c) Consumer Protection Consumer d) Consumer Prevention Act
11. _______ என்பவர் நவீன சந்தையியலின் மன்னர் ஆவார்.
    a) நுகர்வோர் b) மொத்த வியாபாரி
    c) உற்பத்தியாளர் d) சில்லறை வியாபாரி
12. நுகர்வோர் எதிலிருந்து பாதுகாக்கப்பட வேண்டும்?
    a) தயாரிப்பு குறைபாடுகள் b) தயாரிப்பு பற்றாக்குறை
    c) ஒழுங்கற்ற மற்றும் கட்டுப்படுத்தப்பட்ட வணிக நடைமுறைகள்
    d) மேலே உள்ள அனைத்தும்

13. பொருத்துக:

| பட்டியல் I | பட்டியல் II |
| --- | --- |
| i) உள்நாட்டு விற்பனை மீது மத்திய அரசால் வசூலிக்கப்படுவது | 1. GST COUNCIL |
| ii) உள்நாட்டு விற்பனை மீது மாநில அரசால் வசூலிக்கப்படுவது | 2. IGST |
| iii) மாநில அரசு விற்பனைக்கு மத்திய அரசால் வசூலிக்கப்படுவது | 3. SGST |
| iv) சரக்குகள் மற்றும் சேவை தொடர்பான பிரச்சனைகளை தீர்ப்பது | 4. CGST |

a) (i)-4, (ii)-3, (iii)-1, (iv)-2 b) (i)-1, (ii)-2, (iii)-3, (iv)-4
c) (i)-4, (ii)-3, (iii)-2, (iv)-1 d) (i)-3, (ii)-4, (iii)-1, (iv)-2

14. புதிய பொருளாதாரக் கொள்கை அறிமுகப்படுத்தப்பட்ட ஆண்டு
a) 1980 b) 1991 c) 2013 d) 2015

15. விற்பனை ஒப்பந்தத்தில் யாருக்கு உரிமை உண்டு?
a) வாங்குனர் b) விற்பவர் c) வாடகைக்கு எடுப்பவர் d) அனுப்பப் பெற்றவர்

16. எத்தனை மாதங்களுக்குப் பின் காசோலை காலாவதியாகிறது?
a) 3 மாதங்கள் b) 4 மாதங்கள் c) 5 மாதங்கள் d) 2 மாதங்கள்

17. தொழில் முனைவு என்ற சொல் எந்த மொழி சொல்லிலிருந்து தருவிக்கப்பட்டது?
a) இலத்தீன் b) பிரஞ்ச் c) கிரேக்க d) ஹீப்ரு

18. ________ இந்தியாவை உலகளாவிய வடிவமைப்பு மற்றும் உற்பத்தி மையமாக மாற்றுவதற்காக வடிவமைக்கப்பட்டுள்ளது.
a) டிஜிட்டல் இந்தியா b) இந்தியாவில் தயாரிப்போம் திட்டம்
c) ஸ்டாட்டப் இந்தியா d) வடிவமைப்பு இந்தியா

19. தவறான கூற்றைக் கண்டறிக:
a) இயக்குநர் ஒருவர் நல்ல மன நிலையில் இருக்க வேண்டும்.
b) சாதாரண தீர்மானத்தின் மூலம் ஒரு இயக்குநரை பதவி நீக்கம் செய்யலாம்.
c) தனி வரையறு நிறுமத்தில் இருக்க வேண்டிய குறைந்தபட்ச இயக்குநர்கள் எண்ணிக்கை 2
d) ஒரு பொது நிறுமத்தில் இருக்க வேண்டிய குறைந்தபட்ச இயக்குநர்களின் எண்ணிக்கை 5

20. ________ கூட்டம் நிறுமத்தின் வாழ்நாளில் ஒருமுறை மட்டுமே கூட்டப்படும்.
a) சட்டமுறை b) ஆண்டு பொது c) சிறப்பு d) வகுப்பு

## பகுதி - II

**II. எவையேனும் 7 வினாக்களுக்கு விடையளி:** *(வினா எண். 30 கட்டாய வினா)* 7 x 2 = 14

21. குறியிலக்கு மேலாண்மையின் ஏதேனும் இரண்டு நன்மைகளைக் குறிப்பிடுக.
22. பங்குச்சந்தை - வரைவிலக்கணம் தருக.
23. மனிதவள மேலாண்மையின் இயல்புகளில் ஏதேனும் இரண்டு கூறுக.
24. சமூக சந்தையிடுகை என்றால் என்ன?
25. ஜான் F.கென்னடி கூறிய நுகர்வோர் உரிமைகள் யாவை?
26. தாராளமயமாக்கலின் ஏதேனும் இரண்டு குறைபாடுகளைக் கூறுக.
27. கீறலிடுதல் எத்தனை வகைப்படும்? அவை யாவை?
28. டிஜிட்டல் இந்தியாவைப் பற்றி குறிப்பு வரைக.
29. நிழல் இயக்குநர் என்பவர் யார்?
30. ஆணை உரிமை வரிசை பற்றிக் கூறு.

## பகுதி - III

III. எவையேனும் 7 வினாக்களுக்கு விடையளி: *(வினா எண் 40 கட்டாய வினா)* 7 x 3 = 21

31. உடனடிச் சந்தை மற்றும் எதிர்நோக்கிய சந்தைகளுக்கும் இடையேயான வேறுபாடுகளைக் கூறுக.
32. மேலாண்மை அடிப்படைக் கருத்துக்களைக் கூறுக.
33. உள்வழி வர்த்தகம் என்றால் என்ன?
34. ஆட்சேர்ப்பு செயல்பாட்டில் உள்ள படிநிலைகளைக் கூறுக.
35. சந்தையிடுகையாளர் ஓர் புதுமை கண்டுபிடிப்பாளரா? நீவிர் அதை ஏற்றுக்கொள்வீரா? காரணம் கூறு.
36. நுகர்வோரியலின் முக்கியத்துவம் பற்றி எழுதுக.
37. உலகமயமாதலின் ஏதேனும் மூன்று தாக்கங்களை எழுதுக.
38. தொழில் முனைவையே தொழிலாகக் கொண்ட முனைவோர் எப்படி செயல்படுகிறார்?
39. காலத்தின் அடிப்படையில் சந்தையினை எப்படி வகைப்படுத்துவாய்?
40. செயல்படும் இயக்குநர், செயல்படா இயக்குநர் - வேறுபடுத்துக.

## பகுதி - IV

IV. அனைத்து வினாக்களுக்கும் விடையளி: 7 x 5 = 35

(ஒவ்வொரு வினாவிற்கான விடையும் 250 வார்த்தைகளுக்கு மிகாமல் இருக்க வேண்டும்)

41. a) மேலாண்மைக்கு பீட்டர் டிரக்கரின் பங்களிப்பு யாது?

*(அல்லது)*

b) மூலதனச் சந்தையின் பல்வேறு பணிகளை விளக்குக.

42. a) புறத்தோற்றமற்ற பத்திரங்களின் நன்மைகளை விவரி.

*(அல்லது)*

b) ஆட்சேர்ப்பு மற்றும் தேர்வினை வேறுபடுத்திக் காட்டுக.

43. a) பயிற்சியின் நன்மைகளை விளக்குக.

*(அல்லது)*

b) சந்தைகள் எவ்வாறு வகைப்படுத்தப்படுகிறது? விவரி.

44. a) நுகர்வோர் எவ்வாறு சுரண்டப்படுகிறார்கள்?

*(அல்லது)*

b) எல்.பி.ஜி. (L.P.G) யின் தாக்கத்தினை விளக்குக.

45. a) நிபந்தனை மற்றும் நம்புறுதிகளை வேறுபடுத்துக.

*(அல்லது)*

b) காசோலையின் இயல்புகளை விவரி.

46. a) மகளிர் தொழில் முனைவோர் சந்திக்கும் பிரச்சனைகளை விவரி.

*(அல்லது)*

b) கடன் பத்திரங்களின் வகைகளைக் கூறுக.

47. a) பல வகையான நிறுமக் கூட்டங்களை விளக்குக.

*(அல்லது)*

b) இயக்குநரின் கடமைகளை விவரி.

******